2003 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவேற்காடு பேரூராட்சியில் ஏற்கெனவே 846 குழல் விளக்குகள் இருக்கின்றன. மின் கட்டணம் கூடுவதால் பேரூராட்சிக்கு நிதிச் சுமை கூடுகிறது. பேரூராட்சியில் இருக்கின்ற உள்ளாட்சி அமைப்புகளால் முடிவு செய்யப்படுகிற விஷயம் இது. எனவே, நிதிச் சுமையின் காரணமாக--பேரூராட்சிக்குப் போதிய விளக்கு வசதி செய்யப்பட்டுள்ளதால்--அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவேற்காடு தேர்வு நிலைப் பேரூராட்சியானது திருவேற்காடு ஸ்ரீதேவி கருமாரி அம்மன் திருக்கோயில் அமைந்து இருக்கிற பகுதியாகும். இந்தப் பகுதி தினமும் ஆயிரக்கணக்கிலே பக்தர்கள் வந்து செல்கின்ற பகுதியாகவும் இருக்கிறது. நேர்த்திக் கடன் செலுத்துபவர்கள் இரவு நேரங்களில் தங்கி விட்டு, காலையில் தரிசனம் செய்கின்ற ஒரு நிலையும் இருக்கிறது. ஆகவே, இரவு நேரங்களில் பக்தர்கள் தங்குகின்றபோது அந்தப் பகுதியில் தேவையான வெளிச்சம் இல்லாததால் அதிக சிரமத்திற்குள்ளாகிறார்கள். அந்தப் பேரூராட்சிக்கு நிதி நெருக்கடி இருப்பதாலும், அந்தத் திருக்கோயில் அதிகம் வருமானம் தரக்கூடிய திருக்கோயிலாக இருப்பதாலும், அந்தப் பகுதியிலே அமைக்கப்படுகின்ற குழல் விளக்குகளுக்கு ஏற்படும் மின்சாரச் செலவு பற்றி திருக்கோயிலிடமே வற்புறுத்தி அதற்குத் தேவையான நிதியினைப் பெற்று மாதா மாதம் மின்சாரக் கட்டணத்தையும் செலுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் குறிப்பிட்டதுபோல, அறநிலையத் துறை அலுவலர்களிடம் குறிப்பிட்டு, இதற்குண்டான நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு சிந்திக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெ. பழனியப்பன்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது, சோடியம் மின் விளக்குகள் அமைப்பதற்கு

[2003 ஏப்ரல் 30

வாய்ப்பில்லை என்று சொன்னார்கள். ஏற்கெனவே அமைக்கப்பட்ட சோடியம் மின் விளக்குகளாக இருந்தாலும் சரி அல்லது குழல் மின் விளக்குகளாக இருந்தாலும் சரி, காலைப்பொழுதிலே வருகிறபோது, பகல் நேரங்களில்கூட நிறைய கிராமங்களில் பேரூராட்சிகளில், நகராட்சிகளில் அந்த மின் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. எவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும்கூட, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளுக்காக இலவச மின்சாரத்தை வழங்கி வருகிற இந்தச் சூழ்நிலையில், அந்த மின்சாரத்தினுடைய தேவையைக் கருதி, இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிவதோடு, பகல் நேரங்களில் அந்த மின்சார விளக்குகள் எரிந்தாலும்கூட, அவற்றை இயற்கையாகவே, விஞ்ஞான ரீதியாகவே கட்டுப்படுத்துவதற்கு ஏதோ கருவி இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, ஆட்டோமேட்டிக்காக அணைவதற்குக் கருவி இருக்கிறது என்று சொல்கிற இந்தச் சூழ்நிலையில், அதைக் கட்டுப்படுத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு சில நகராட்சிப் பகுதிகளில், மாநகராட்சிப் பகுதிகளில் ஆட்டோமேட்டிக்காக காலை 6 மணிக்குள்ளாக அந்தக் குழல் விளக்குகளுக்கு மின்சாரம் தடைப்பட்டு நிறுத்தப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில், ஊராட்சிப் பகுதிகளில், அந்தப் பகுதியில் இருக்கின்ற உள்ளாட்சி அமைப்புகள் இதற்கு முழுமையாக இந்த அரசுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். அந்த அடிப்படையில் கடைப்பிடித்தால்தான் பொழுது விடிந்த பிறகு தொடர்ந்து மின் விளக்குகள் எரிவது தடை செய்யப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 371, திரு. வீ. சந்திரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.